©
தமிழ்நாடு அரசு
2017

கையெழுத்துத் தொடர்

# நிதித் (படிகள்) துறை

## அரசாணை எண்.362, நாள்:11-12-2017

(ஹேவிளம்பி, கார்த்திகை.25, திருவள்ளுவர் ஆண்டு 2048)


<u>**சுருக்கம்**</u>

**வருங்கால வைப்பு நிதி** - ஊதிய திருத்தம் - திருத்திய ஊதிய அடிப்படையில் பொது வருங்கால வைப்பு நிதி மாதாந்திர சந்தா பிடித்தம் செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை (நிலை) எண்.461, நிதி (படிகள்)த் துறை, நாள் 22-09-2009.
2. அரசாணை (நிலை) எண்.303, நிதி (ஊதியக் குழு)த் துறை, நாள் 11-10-2017.

-oOo-

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாநில அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கு அலுவலர் குழு, 2009-இன் பரிந்துரைகளின்படி திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பொது வருங்கால வைப்பு நிதியின் மாதாந்திர சந்தா 12 சதவீதத்திலேயே தொடர்ந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டது.

**2.** மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மாநில அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கு அலுவலர் குழு, 2017-இன் பரிந்துரைகளின்படி ஊதிய திருத்தம் நடைமுறைப்படுத்தபட்டுள்ளது.

**3.** மைய அரசால் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை திங்களிலிருந்து திருத்திய அகவிலைப்படி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது. அதனைப் பின்பற்றி, மாநில அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை திங்களிலிருந்து திருத்திய அகவிலைப்படி அனுமதிக்கப்படுகிறது.

**4.** மாநில அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் ஊதிய திருத்தத்தினை கருத்தில்கொண்டு, திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட, அடிப்படை ஊதியம் (Basic Pay) அதாவது ஊதிய அட்டவணையில் உரிய நிலைகளில் பெறும் ஊதியம் (Pay drawn in the prescribed Level in the Pay Matrix), சிறப்பு ஊதியம் (Special Pay), தனி ஊதியம் (Personal Pay), அகவிலைப்படி (Dearness Allowance) ஆகியவற்றின் மொத்த தொகையில் **12** சதவீதம் பொது வருங்கால வைப்பு நிதியின் மாதாந்திர சந்தாவாக தொடர்ந்து பிடித்தம் செய்திட அரசு ஆணையிடுகிறது. கணக்கிடப்படும் சந்தாத் தொகை அடுத்த நூறு ரூபாயாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**5.** பொது வருங்கால வைப்பு நிதியில் **12** சதவீதத்திற்கு மேலாக மாதச் சந்தா செலுத்திட தடையேதுமில்லை எனவும் அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா.

**6.** மேற்படி ஆணை 1-11-2017 முதல் நடைமுறைக்கு வருகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை-600 022.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை-600 022.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை-600 022.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை-600 018.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை-600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை-600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை-600 009 / மதுரை.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை-600 035.
அனைத்து சம்பளக் கணக்குகள் அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை-600 104.
அனைத்து அரசுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், மாநகராட்சி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-600 003.
.ஆணையாளர், மாநகராட்சி, மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் / அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>நகல்:</u>
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் நேர்முகச் செயலாளர், நிதித்துறை, சென்னை-600 009.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-600 009.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப் பிரிவு, நிதி அமைச்சகம் (செலவுத்துறை), அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்.

**-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-**

**பிரிவு அலுவலர்.**